குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.88/2019

அ.சா.4

2026–ம் ஆண்டு பிப்ரவரி 24–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஷ்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | மாரியப்பன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.49 மணி,

Accused Suriyamoorthi absent. Petition u/s.317 of Cr.P.C filed and allowed. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தீவட்டிப்பட்டியில் குடியிருந்து, நியாயவிலைக் கடையில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு ஒருமாதம், 14 ஆம் தேதி நான் தீவட்டிப்பட்டியில் உள்ள அய்யங்கார் பேக்கரியில் டீ குடிக்க சென்றேன். அப்போது போலிசார் வந்து சர்வீஸ் சாலையில் கிழங்கு மில் அருகே விபத்து நடந்தது சம்மந்தமாக சாலையை அளந்து குறியீடு செய்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். நான் அப்போது, அங்கே இருந்தேன். என்னிடம் போலிசார் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) என்னுடன் கையெழுத்து செய்த மற்றொரு நபர் யார் என்று நினைவில் இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. போலிசார் படம் வரைந்த தாளில் கையெழுத்து வாங்கினார்களா அல்லது வேறுதாளில் கையெழுத்து வாங்கினார்களா என்று தற்போது நினைவில் இல்லை. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று நினைவில் இல்லை.

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.02.24 17:41:10 +0530

எழுதியிருந்த தாளில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா அல்லது வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்களா என்றால், எழுதியிருந்த தாளில் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

3. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்தேன்.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.55 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.24 17:41:13 +0530